**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி**
**முன்னிலை : திரு. என். ஞானசம்பந்தம், பி.ஏ.பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**
**2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை**

**இ.ம.எண்.10/2021**
**இன்**
**இ.ம. எண். 350/2008**
**இன்**
**அசல் வழக்கு எண்.579/2004**

S.C.B. ராஜா சின்ன கருப்பன் --- மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. லட்சுமி சண்முகசுந்தரம்
2. S.C.B. பன்னிருகைசெல்வன் (இறப்பு)
3. S.C.B. காந்தி (இறப்பு)
4.S.C.B.கண்ணன் (இறப்பு)
5. மாரியம்மாள்
6. S. விவேகானந்தன்
7. S.ஹரிகிருஷ்ணன் (இறப்பு)
8. H. மலர்விழி
9. மைனர். H. விகாஷ்சுந்தர்
10. P. ஜெயந்தி
11. இந்திரா பிரியதர்ஷினி
12. பாலகுமார்
13. துர்கா ---எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

(9 ம் பிரதிவாதி மைனர் H. விகாஷ்சுந்தர்-க்காக
தாயார் மற்றும் காப்பாளருமான 8 ம் பிரதிவாதி H. மலர்விழி)

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி. ஜி. சபிதா மற்றும் திரு. பி.வேலுமணி ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததாலும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகததாலும் ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டும், இறுதி விசாரணைக்காக 21.12.2022 ஆம் தேதி மனுதாரர் / வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

மனுவில் கண்ட விபரப்படி I.A.No.350/2008 In O.S.No.579/2004 மனுவை திருத்தம் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி மனுதாரர்/ வாதியால் சி.பி.சி. ஆர்டர் 6, ரூல் 17 மற்றும் பிரிவு 151ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் பின்வருமாறு:-** மனுதாரர் தாவாவை பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்ததில் 1/5 பாகத்தை பொறுத்து வாதிக்கு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் விசாரணைக்கு தனது வழக்கறிஞருடன் தயாராக இருந்திருந்தபோது குடும்பச்சொத்துக்கள் சில விடுபட்டது தெரிய வந்தது. அதில் புல எண்.431-ல் ஏக்கர் 2.41 சென்ட், புல எண்.460-ல் 11.23 ஏக்கர் நிலங்களும் விடுபட்டுள்ளது. ஆனால் தவறுதலாக புல எண்.14/2 சி3 மட்டும் தாவாவில் காட்டப்பட்டுள்ளது. புல எண்.14/2 டி விடுபட்டுள்ளது மற்றும் 14/2 இ-ல் 8720 சதுரடி நிலம் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது அதுவும் விடுபட்டுள்ளது மற்றும் 275/3, 274/6 ஆகிய நிலங்களும் தாவாவில் விடுபட்டுள்ளது. மேலும் 10வது இனச்சொத்தில் கதவு எண்.282-ல் 3 சென்ட் நிலம் போக மீதமுள்ள அனைத்து இடம் விற்பனை செய்யப்பட்டு விட்டது. மேலும் தாவா 2வது இனச்சொத்தில்

ஒரு ஏக்கரில் 18732 சதுரடி நிலம் விற்பனை செய்யப்பட்டது போக மீதி இடம் 50 1/2 அடி சென்ட் நிலம் மட்டுமே உள்ளது. 2 மற்றும 14 இனச்சொத்துக்கள் இரண்டும் ஒன்றே. எனவே 14 வது இடச்சொத்தை நீக்கறவு செய்ய வேண்டும், மற்றும் 3, 4 இனச்சொத்துக்கள் பதிவு ஆவணம் மூலம் பாகப்பிரிவினை செய்துக்கொள்ளப்பட்டு விட்டது. எனவே அவற்றையும் விடுவிக்க வேண்டும். 7 மற்றும் 8 இனச்சொத்துக்கள் மனுதாரரின் பாகத்திற்கு பதிவு செய்து பாகப்பிரிவினை ஒதுக்கப்பட்டுள்ளதால் அதனையும் நீக்கறவு செய்ய வேண்டும். எனவே தாவா சொத்து விபரத்தில் மேற்படி மாற்றங்கள் பொறுத்து திருத்தம் செய்ய வேண்டும். மேற்படி திருத்தமானது புது வழக்கையோ, புது வழக்குமூலத்தையோ உருவாக்கவில்லை. மேலும் வழக்கின் தன்மையும் மாறப்போவதில்லை. மாறாக திருத்தம் செய்ய அனுமதிக்கவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்று மனு தாக்கல்.

3. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

4. இந்த மனுவில் தீர்மனிக்கப்படவேண்டிய விசயம் யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. அசல்வழக்கானது கடந்த 16.08.2005 ம் தேதியன்று வாதிக்கு தாவா சொத்தில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி மனு தாக்கல்

செய்யப்பட்டு நிலுவையில் இருந்த சமயத்தில் மனுதாரர் சில சொத்துக்களை சேர்க்கவும், சில சொத்துக்களை நீக்கறவு செய்யவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தற்போது புதியதாக புல எண்.431–ல் 2.41 சென்ட் நிலமும், புல எண்.460–ல் 11 ஏக்கர் 23 சென்ட் நிலமும் மற்றும் புல எண்.14/2 டி நிலமும் மற்றும் புல எண். 14/2 இ–ல் 8720 சதுரடி நிலமும் மற்றும் புல எண்.225/3, 224/6 ஆகிய நிலங்கள் சேர்க்க வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளார்.

7. மேற்படி இடங்கள் எவ்வாறு தங்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு எவ்வித விபரமும் திருத்தல் விபரத்தில் இல்லை. மேலும் அசல் வழக்கில் விடுபட்டுள்ளதாக சொல்லப்படும் நிலங்களில் மதிப்பு விபரங்கள் மற்றும் அதில் வாதிக்கு உள்ள பாகவிகிதம் மற்றும் மதிப்பு போன்ற விபரங்கள் திருத்தல் விபரத்தில் குறிப்பிடப்படவில்லை. மேற்படி புதியதாக சேர்க்க வேண்டிய சொத்துக்கள் குறித்து வாதி மற்றும் பிரதிவாதிகளின் உரிமைமூலம், பாகவீதம் மற்றும் உடைமை விபரம் ஆகியவற்றை புதியதாக தீர்மானிக்க வேண்டும். சிறிய அளவில் சொத்தும் எதுவும் விடுபடவில்லை. மாறாக மிக பெரிய அளவிலான மற்றும் மேற்படி 6 லக்க சொத்துக்கள் புதியதாக சேர்க்க வேண்டிய நிலையில் அந்த சொத்துக்களை பொறுத்து விரிவான விசாரணை இல்லாமல் நேரடியாக அந்த சொத்துக்களை பொறுத்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க முடியாது. இது பொறுத்து நமது மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கீழ்க்கண்ட முன் தீர்ப்புகள் மனுதாரர் தரப்பில் முன் நிறுத்தப்பட்டுள்ளது.

**CDJ 2008 SC 2045:–** The Court may not have a suo motu power to amend a decree but the same would not mean that the court cannot rectify a mistake. If a property was subject matter of pleadings and the court did not frame an issue which

it ought to have done, it can, at a later stage, when pointed out, may amend the decree – The power of amendment, in a case of this nature would not only be dependent upon the power of the court but also the principle that a court shall always be ready and willing to rectify the mistake it has committed.

8. ஆனால் மேற்படி முன் தீர்ப்பு இவ்வழக்கிற்கு பொருந்தாது. மனுதாரர் தாவா பிராதில் திருத்தம் கோராமல் நேரடியாக இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்து மனுவில் திருத்தம் கோரியுள்ளார். இந்த இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க மனுவில் தரப்பினர்களின் உரிமை, பங்கு வீதம் பற்றி முடிவு செய்ய முடியாது. மாறாக அசல் வழக்கில் திருத்தம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் மட்டுமே தேவைப்படின் மேலும் ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க முடியும். எனவே இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

**இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

N GNANASAMBANDAM Digitally signed by N GNANASAMBANDAM Date: 2023.01.10 18:43:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி–</u> இல்லை

<u>மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணங்கள்–</u> இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சி–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்–</u>** இல்லை

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.01.10 18:43:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், பழனி.
இ.ம.எண்.10/2021
இன்
இ.ம.எண்.350/2008
இன்
அ.வ.எண்.579/2004
________________ உத்தரவு
நாள் –10.01.2023